(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO. 262/2022 அ.சா.9**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ராமலெட்சுமி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 11.08.2025.

(**A**5 – எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார் மற்ற எதிகள் ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் கீரத்துரை ரோடு புதுமகாளிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் பெயர் முனியசாமி. நான் புது மகாளிப்பட்டி மாநாகராட்சியில் சேர் பாத்திரம் வாடகைக்கு விட்டு வருகிறேன். எனது கடைக்கு அருகே சாட்சி முனியசாமி என்பவர் கறிகடை நடத்தி வருகிறார். இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அரசுத்தரப்பில் கோரிக்கை விடப்பட்டு, ஏற்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை**

மதுரை சிந்தாமணி ரோடு வாழத்தோப்பில் குடியிருக்கும் பால்பாண்டி என் கடைக்கு அருகில் உள்ள அந்தோணி கடையில் அடிக்கடி வந்து பேசிக்கொண்டிருப்பார் என்றும், 03.05.2019 ம் தேதி பகல் 1.45 மணியளவில் நான் என் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அந்தோணி கடை முன் பால்பாண்டி எடிஎம் வாட்ச்மேன் சுந்தர்ராஜ் மற்றும் சிலர் பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது தெற்கிருந்த வடக்காக 2 மோட்டார் சைகிளில் வந்த நபர்கள் வண்டியை எடிஎம் எதிரே உள்ள ராமசாமி நாயுடு சந்தருகே நிறுத்திவிட்டு கையில் அருவாள் கத்தியுடன் அந்தோணி கடையை பார்த்து வேகமாக வந்ததாகவும் அப்போது பெரிய வண்டியில் இருந்த ஒருவர் அந்தா இருக்கண்டா பால்பாண்டி போய் வெட்டுங்கடா என்று சத்தமாக சொன்னதாகவும், அதை கேட்டு பால்பாண்டி எழுந்து சுதாரிப்பதற்குள் பின்னால் பெயர் கேட்டு தெரிந்துகொண்ட மச்சபாலா, சைனா பிரபாகரன், புல்லட்டு மணி பால்பாண்டியை நோக்கி வேகமாக வந்ததாகவும் அங்கிருந்தவர்களை பார்த்து இவரும் ஓடிப்போங்கடா என்று மிரட்டியதாகவும், அவ்வழியே வந்த பொது மக்கள் நாலாபுறமும் சிதறிஓடியதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அது சரியல்ல. மேலும் பால்பாண்டி உயிருக்கு பயந்து அங்கிருந்த அத்தோனி ஸ்டீபனுடைய பழைய துணி பாத்திரக்கடைக்குள் ஓடி ஒழிய முயன்றதாகவும் அந்த பழைய துணி பாத்திரக்கடைக்குள் வைத்து மேற்படி எதிரிகள் மூவரும் கையிலிருந்த ஆயுதங்களால் மாறி மாறி

வெட்டியதாகவும் எங்க அப்பா என்னடா பன்றிக என்று கேட்டு, ஓடி வந்த தங்கராஜ் என்பவரை கையிலிருந்த ஆயுதங்களை காட்டி, ஒழுங்கா ஓடிடுங்க பால்பாண்டியை போட்டது போல் உங்களையும் கொன்று விடுவோம் என்று மிரட்டியதாகவும்,சைனா பிரபாகரன் அவரது கையில் வைத்திருந்த பட்டா கத்தியை அங்கேயே போட்டுவிட்டதாகவும் பின்னர் நால்வரும் நாயுடு சந்துபக்கம் வேகமாக சென்றுவிட்டதாகவும் , நாங்கள் பயந்த கடையை சாத்திவிட்டதாகவும், பின்னா பால்பாண்டி சம்பவ இடத்தில் இறந்ததாக தெரியவந்தது என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. மேலே கண்டவாறு போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

Sd/- ராமலெட்சுமி

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.